**தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநரின் கூட்டு அறிக்கை**

மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில், Haycarb PLC நிறுவனம் தனது உறுதியான செயல்திறன் மற்றும் மாற்றங்களுக்கு ஏற்ப தன்னைத் தழுவிக்கொள்ளும் திறனை வெளிப்படுத்தியது. குழுமத்தின் ஒருங்கிணைந்த வருவாய் ரூ. 67.08 பில்லியனாக உயர்ந்ததன் மூலம், அமெரிக்க டொலர் 200 மில்லியன் வருவாய் என்ற முக்கிய மைல்கல்லை எட்ட முடிந்தது. 2025/26 நிதியாண்டிற்கான வரிக்கு முன்பட்ட இலாபம் ரூ. 5.89 பில்லியனாகவும், வரிக்குப் பிந்தைய இலாபம் ரூ. 4.34 பில்லியனாகவும் பதிவானது. விநியோகச் சங்கிலி கட்டுப்பாடுகள், புவிசார் அரசியல் சவால்கள் மற்றும் செலவின அழுத்தங்கள் ஆகியவற்றால் குறிக்கப்படும் சிக்கலான உலகளாவிய செயற்பாட்டு சூழல் நிலவிய போதிலும், குழுமம் மதிப்புக் கூட்டப்பட்ட செயற்படுத்தப்பட்ட கார்பன் தயாரிப்புகள் பிரிவில் தனது நிலையை மேலும் வலுப்படுத்தி, நிலையான வளர்ச்சியையும் பங்குதாரர்களுக்கான தொடர்ச்சியான மதிப்பையும் உருவாக்கியது.

1,500-க்கும் மேற்பட்ட தயாரிப்புகளை உள்ளடக்கிய குழுமத்தின் பல்துறை தயாரிப்பு தொகுப்பு அதன் செயற்பாட்டு நிலைத்தன்மைக்கு வலு சேர்த்ததுடன், தங்க மீட்பு, ஆற்றல் சேமிப்பு, நீர் மற்றும் காற்று சுத்திகரிப்பு போன்ற முக்கிய சந்தைப் பிரிவுகளில் வலுவான தேவையை ஆதரித்தது. மின்சார போக்குவரத்திற்கான மாற்றம், செயற்கை நுண்ணறிவு (AI) தரவு மையங்களின் விரிவாக்கம் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திட்டங்களுக்கான மின்வலையமைப்பு சமநிலைப்படுத்தல் தேவையின் அதிகரிப்பு ஆகியவற்றால் ஆற்றல் சேமிப்பு கார்பன் தயாரிப்புகளின் வளர்ச்சி முன்னெடுக்கப்பட்டது. அதேவேளை, சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் ஒழுங்குமுறைத் தேவைகள் அதிகரித்தமையால் உலகளவில் சுத்திகரிப்பு பயன்பாடுகளுக்கான தேவை தொடர்ந்தும் வலுவடைந்தது. ஆசியா மிகப்பெரிய சந்தையாகத் தொடர்ந்ததுடன், வட அமெரிக்கா, ஆப்பிரிக்கா மற்றும் ஆஸ்திரேலியாவில் உறுதியான செயல்திறன் பதிவானது. எனினும், ஐரோப்பாவில் தேவை மந்தமாக காணப்பட்டது.

2025/26 ஆம் ஆண்டில், சுற்றுச்சூழல் பொறியியல் தீர்வுகள் (Environmental Engineering Solutions) வணிகம் ரூ. 1.93 பில்லியன் வருவாயைப் பதிவு செய்தது. இலங்கை மற்றும் மாலைத்தீவுகளில் நீர் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு திட்டங்கள், இயக்கம் மற்றும் பராமரிப்பு சேவைகளுக்கான அதிகரித்து வரும் தேவை இந்த முன்னேற்றத்திற்கு ஆதரவளித்ததுடன், புவியியல் விரிவாக்கத்திற்கான புதிய வாய்ப்புகளையும் உருவாக்கியுள்ளது.

நிலையான புத்தாக்கம் Haycarb நிறுவனத்தின் மூலோபாயத்தின் மையக் கூறாகத் தொடர்ந்தது. ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D), செயல்முறை மேம்பாடு மற்றும் டிஜிட்டல்மயமாக்கலில் மேற்கொள்ளப்பட்ட தொடர்ச்சியான முதலீடுகள் தயாரிப்புத் திறன்களையும் செயற்பாட்டு செயல்திறனையும் மேலும் மேம்படுத்தின. ஆண்டின் போது, குழுமம் 14 புதிய தயாரிப்புகளை வெற்றிகரமாக அறிமுகப்படுத்தியது. இவற்றில் சிலிக்கான் கலவைப் பொருட்களுக்கான ஆற்றல் சேமிப்பு கார்பன்கள், சூப்பர் கேபாசிட்டர் பயன்பாடுகளுக்கான மேம்படுத்தப்பட்ட தயாரிப்புகள் மற்றும் PFAS நீக்கத்திற்கான திறன் வாய்ந்த செயற்படுத்தப்பட்ட கார்பன் தீர்வுகள் அடங்கும். இவை அனைத்தும் சுற்றுச்சூழலுக்கு உகந்த மற்றும் நிலையான தீர்வுகளை வழங்குவதற்கான நிறுவனத்தின் அர்ப்பணிப்பை வலுப்படுத்துகின்றன.

ஆண்டின் போது, ஆற்றல் சேமிப்பு கார்பன் உற்பத்தித் திறனை இரட்டிப்பாக்கும் நோக்கில் குழுமம் முதலீடு செய்தது. இந்த மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த சந்தைப் பிரிவின் வளர்ச்சியை ஆதரிப்பதற்காக, எதிர்வரும் ஆண்டுகளிலும் அதன் திறன்களை மேலும் வலுப்படுத்தும். பிலிப்பைன்ஸில் கட்டமைக்கப்பட்டு வரும் புதிய உற்பத்தி நிலையம் செயல்பாட்டிற்கு வந்த பின்னர், உற்பத்தித் திறன் அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், மூலப்பொருள் விநியோகச் சங்கிலியின் நிலைத்தன்மையும் செயல்திறனும் மேலும் மேம்படும். இதனுடன், செயல்படுத்தல் மற்றும் பிந்தைய செயல்படுத்தல் செயல்முறைகளின் மேம்பாடுகள் மற்றும் Recogen நடவடிக்கைகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் குழுமத்தின் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் நிலைத்தன்மை இலக்குகளை முன்னெடுக்க உதவும்.

தேங்காய் ஓடு கரி (Coconut Shell Charcoal) மூலப்பொருள் கொள்முதல் செய்வதில் இந்த ஆண்டும் சவால்கள் தொடர்ந்தன. அறுவடை நிலைமைகளில் முன்னேற்றம் காணப்பட்ட போதிலும், மூலப்பொருள் செலவின அழுத்தங்கள் தொடர்ந்தன. இதற்கு பதிலளிக்கும் வகையில், குழுமம் தனது உலகளாவிய கொள்முதல் வலையமைப்பை வலுப்படுத்தி, விநியோகச் சங்கிலியின் நிலைத்தன்மையை மேம்படுத்தியதுடன், மாற்று நிலையான மூலப்பொருட்களையும் ஆராய்ந்தது. அதேவேளை, விநியோகதாரர் சமூகங்களுக்கு ஆதரவளித்தும், நிலையான மூலப்பொருள் ஆதார நடைமுறைகளை முன்னெடுத்தும் செயல்பட்டது.

Haycarb நிறுவனத்தின் நிலைத்தன்மை நிகழ்ச்சித் திட்டம் அதன் ACTIVATE 2030 சாலைவரைபடத்தின் வழிகாட்டுதலின் கீழ் முன்னெடுக்கப்பட்டது. இது கார்பன் வெளியீட்டைக் குறைத்தல், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பயன்பாட்டை அதிகரித்தல், நீர் வள மேலாண்மை மற்றும் சமூக மேம்பாடு ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. வலுவான நிர்வாக கட்டமைப்புகளுடன் இணைந்து, குழுமம் தனது அனைத்து நடவடிக்கைகளிலும் நிலைத்தன்மை மற்றும் ஒழுக்கமான வணிக நடைமுறைகளை மேலும் ஒருங்கிணைத்தது.

“நிலையான புத்தாக்கம்” என்ற எங்கள் அடிப்படை தத்துவத்தின் வழிகாட்டுதலின் கீழ், உற்பத்தி மற்றும் தொழில்நுட்ப சிறப்புத் திறன் Haycarb நிறுவனத்தின் மூலோபாயத்தின் மையத்தில் தொடர்கிறது. வலுவான தொழில்சார் சுகாதார மற்றும் பாதுகாப்பு கட்டமைப்பின் கீழ், எங்கள் தொழில்நுட்ப மற்றும் செயல்முறை திறன்களை தொடர்ந்து மேம்படுத்தி வருகிறோம்.

எங்கள் முழுமையான மதிப்பு முன்மொழிவு, புத்தாக்கத்தையும் வளர்ச்சியையும் முன்னெடுப்பதில் ஊழியர்களைச் செயற்படச் செய்கிறது. திறமையான குழு ஒருங்கிணைப்பின் வலிமையை உணர்ந்து, தயாரிப்பு மற்றும் செயல்முறை புத்தாக்கத்தை ஆதரிக்கும் உயர்திறன் கொண்ட குழுக்களை உருவாக்கி பராமரிப்பதில் தொடர்ந்து கவனம் செலுத்துகிறோம். டிஜிட்டல்மயமாக்கலும் எங்கள் செயற்பாடுகளில் அதிக செயல்திறனையும் நிலைத்தன்மையையும் உருவாக்கும் ஒரு முக்கிய மூலோபாய முன்னுரிமையாகத் தொடரும்.

எதிர்காலத்தை நோக்கிப் பார்க்கும் போது, அதிகரித்து வரும் சுற்றுச்சூழல் ஒழுங்குமுறைகள், தொழில்நுட்ப முன்னேற்றங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கான உலகளாவிய மாற்றம் ஆகியவற்றால் உருவாகும் நீண்டகால வளர்ச்சி வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள குழுமம் சிறந்த நிலையில் உள்ளது. Haycarb தனது புத்தாக்கத் திறன்களை வலுப்படுத்தி, உலகளாவிய தடத்தை விரிவுபடுத்தி, செயற்பாட்டு நிலைத்தன்மையை மேம்படுத்துவதன் மூலம் நிலையான மதிப்பை உருவாக்கத் தொடர்ந்து செயல்படும்.

மாறிவரும் செயற்பாட்டு சூழ்நிலைகளில் உறுதியான தலைமைத்துவம், அர்ப்பணிப்பு மற்றும் தன்னம்பிக்கையுடன் செயல்பட்ட Haycarb குழுவினருக்கு எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். எங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் மீது தொடர்ந்த நம்பிக்கையையும் ஒத்துழைப்பையும் வழங்கிய வாடிக்கையாளர்களுக்கும், எங்கள் பயணத்தின் முழு காலத்திலும் உறுதியான ஆதரவை வழங்கிய அனைத்து பங்குதாரர்களுக்கும் எங்களது ஆழ்ந்த நன்றியைத் தெரிவிக்கிறோம். மேலும், எங்கள் போட்டித்திறன் நிலையை வலுப்படுத்துவதிலும், நிலையான புத்தாக்கத்திற்கான அர்ப்பணிப்பின் மூலம் உலகளாவிய செயற்படுத்தப்பட்ட கார்பன் துறையின் முன்னணி நிறுவனமாக Haycarb நிறுவனத்தின் நிலையை உறுதிப்படுத்துவதிலும் வழிகாட்டுதலும் மேற்பார்வையும் வழங்கிய இயக்குநர் சபைக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.